# பத்திரிக்கை செய்தி

## உணவகத்திற்கு சான்றிதழ் வழங்க லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய சுகாதார ஆய்வாளருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

புகார்தாரர் திரு.ரமேஷ், கரூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தான் நடத்தி வரும் உணவகத்திற்கு சான்றிதழ் கேட்டு கரூர் நகராட்சியில் 2014ம் ஆண்டு விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.செல்வராஜ், சுகாதார ஆய்வாளர், தான்தோன்றிமலை பிரிவு, கரூர் நகராட்சி, கரூர் மாவட்டம் என்பவர் தனக்கு ரூ. 3,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 2014ம் வருடம் மேற்கொள்ளப்பட்டு திரு.செல்வராஜ், சுகாதார ஆய்வாளர், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.3,000/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது கரூர் முதன்மை குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 17.04.2025 அன்று திரு.செல்வராஜ், முன்னாள் சுகாதார ஆய்வாளருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.